(3)

சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டில் இருந்த சீருந்து எண்.TN-42-G-0018னை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய அனுமதியளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அதி.2) துறை

அரசாணை(ப) எண்.459 நாள்: 13.12.2018

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.2275, உள்(போக்குவரத்து) துறை, நாள் 10.10.1990.
2. திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.751/2014/அ3 நாள் 28.06.2018.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.42145/2016/G2, நாள் 10.10.2018.

------

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் இணை இயக்குநர்/திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டிலிருந்த அம்பாசிடர் (பெட்ரோல்) கார் எண்.TN–42–G–0018 ஆனது அரசாணை(நிலை) எண்.28, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ5) துறை, நாள் 30.3.2009ன்படி 29.09.2009–ல் புதிதாக வாங்கப்பட்டது. மேற்படி அம்பாசிடர் கார் அடிக்கடி பழுது ஏற்பட்டு, பழுது நீக்கம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணிமனை நிறுவனம் இல்லாததாலும், அம்பாசிடர் கார் தயாரிப்பு நிறுவனம் தற்போது இல்லாததாலும், பழுதினை நிவர்த்தி செய்ய உதிரி பாகங்கள் வெளிமார்க்கெட்டில் கிடைக்கப்பெறாத நிலையில் முழுமையான பழுது நீக்கம் செய்ய இயலவில்லை. மேலும், மேற்படி வாகனம் அடிக்கடி பழுது ஏற்படுவதால், திட்ட இயக்குநர் ஆய்வுக்குச் செல்வதில் சிரமங்கள் ஏற்படுகிறது. மேலே ஒன்றில் காணும் அரசாணையின்படி, ஈப்பு வாங்கப்பட்டு 10 வருடங்கள் அல்லது 2.00 இலட்சம் கி.மீ ஓடியது இதில் எது பிந்தியதோ அப்போது அவ்வாகனம் கழிவு நீக்கம் செய்யத் தகுதியுடையதாகும். மேற்படி வாகனத்தை கழிவு மேற்கொள்ள வேண்டிய காலஅளவான 10 வருடமும் அல்லது பயணம் மேற்கொண்ட தூரம் 200000 கி.மீ–ஐ எட்டப்படாத நிலையில் முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துரை செய்யக் கோரி தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் கருத்துரை வேண்டி தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, கோயமுத்தூர் அவர்களுக்கு உரிய படிவத்தில் பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது. முதிரா நிலையில் வாகன எண்.TN–42–G–0018ஐ கழிவு செய்ய

..2

அனுமதி அளித்த வல்லுநர் குழு ஆய்வறிக்கை மற்றும் கழிவுப் பிரேரணை, இயக்குநர், மோட்டர் வாகன பராமரிப்புத் துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை மோட்டார் வாகன பாராமரிப்புத் துறை, இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். ஏ1/6657/16, நாள் 10.06.2016–ல் மேற்படி வாகன எண்.TN–42–G–0018னை முதிரா நிலையில் கழிவு செய்ய தொழில் நுட்ப வல்லுநர் குழுவின் கருத்தினை ஏற்று வாகனத்தை முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்ப வல்லுநர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வாகனம் விற்பனை செய்யப்பட்டால் எதிர்பார்க்கப்படும் தொகை ரூ.75,800/–க்கு குறையாமல் அரசிடம் அனுமதி பெற்று விற்பனை செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பழைய வாகனத்தை ரூ.75,800/–க்கு குறைவில்லாமல் விற்பனை செய்வதற்கும், புதிய வாகனம் வாங்கிட அனுமதி வழங்குமாறும் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை ஏற்கலாமென அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி வாகனம் முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய, மோட்டார் வாகன பராமரிப்புத் துறை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டிருப்பின், துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி, வாகனம் கழிவு நீக்கம் செய்ய ஆணை பெறப்பட வேண்டும்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்விற்குப்பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரின் அலுவலக பயன்பாட்டில் இருந்த சீருந்து எண்.TN-42-G-0018–னை முதிரா நிலையில் கழிவு நீக்கம் செய்ய அனுமதியும், பின் இவ்வாகனத்தை ஏலத்தில் விடப்படுவதின் மூலம் கிடைக்கும் தொகையான ரூ.75,800/–ஐ (ரூபாய் எழுபத்தைந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) உடனடியாக அரசுக் கணக்கில் செலுத்திட வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர்.
திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பூர்
இயக்குநர், தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, சென்னை–42.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர் மாவட்டம்,

**நகல்**

நிதி (ஊ.வ) துறை, சென்னை – 9.
உள்(போக்குவரத்து–4) துறை, சென்னை–9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/12/2018

பிரிவு அலுவலர்

13/12/2018